UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED 1978-2-1.4
PERIODICALS DIVISION

**அறிவித்தல்**
கோழிப்பண்ணை க[illegible]
டமிருந்து முட்டைகள்
66 சதத்திற்கு மொத்த
மாகவும் சில்லறையாக
வும் வாங்கப்படும்
(5 மைல் சுற்றளவுக்குள்
வந்துஎடுக்கப்படும்)
கண்ணன்களஞ்சியம்
(மில்க்பாருக்கு அருகில்)
40 பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 2 ரபி அவ்வல் 5 இதழ் 4
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14-2-78




**சன்சோனி கமிஷன்:**
**நேற்றைய விசாரணை**

# பஸ்களில் 50,000
# அகதிகள் யாழ். வந்தனர்

## 5000 சிங்களவர் அனுராதபுரம் சென்றனர்

## இ. போ. சபை டிப்போ அத்தியட்சகர் சாட்சியம்

— நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன் —

**தென்னிலங்கையிலிருந்து பஸ்களில் சுமார் 50,000 அகதிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வந்தார்கள் என்று சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளித்த யாழ். இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் திரு. எஸ். தியாகராசா கூறினார்.**

**இந்த அகதிகளை, யாழ்ப்பாணம் டிப்போவை சேர்ந்த பஸ்களும் கண்டி, குருநாகல், கிளிநொச்சி டிப்போ பஸ்களும் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவந்தாக அவர் கூறினர்**

யாழ்ப்பாணம் நாகவிகாரையிலிருந்து சுமார் 5000 சிங்களவர்களை அனுராதபுரத்திற்கு பஸ்களில் அனுப்பியதாகவும் யாழ்ப்பாணம், இ போ. ச. டிப்போவில் 12 சிங்கள ஊழியர்கள் கடமையாற்றியதாகவும் அவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என்றும், இவர்களில் 4 சிங்களவரை இரண்டு நாட்களாக தனது வீட்டில் வைத்திருந்ததாகவும் திரு. திரு. தியாகராசா கூறினர்.

இவர்கள் இங்கிருக்கப் பயப்பட்டதால் 7 பேர் நாகவிகாரைக்குச் சென்று அங்கிருந்து அனுராதபுரம் சென்றதாகவும் கூறினர்.

ஒரு சிங்களவர் கலவரத்தின் போது யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்லவில்லையென்றும் டிப்போவிற்கு முன் நிரந்தரமாக இருந்தாரென்றும் கூறினர்.

### நேற்றைய விசாரணை

சன்சோனி கமிஷன் விசாரணையின் போது நேற்று எதிர் கட்சி தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாணம் எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ஆகியோர் வந்திருந்தனர். மண்டபத்தில் பெருந்திரளாக இளைஞர்களும் மாணவர்களும் இருந்தனர்

ஆங்கிலத்தில் சாட்சியமளித்த இ. போ ச. அத்தியட்சர் திரு என். தியாகராசாவை சட்டத்தரணி அண்டஆட் மாணிக்கவாசகம் மறுவிசாரணை செய்தார்.

சட்டத்தரணி: 15-ம் தேதி காலை நடந்த சம்பவம் என்ன? -அன்று காலை கடமைக்கு சென்ற இ. போ. ச. ஊழியர் பொலிசாரால் தாக்கப்பட்டு றீகல் தியேட்டருக்கு அருகில் உள்ள குளத்தில் வீசப்பட்டார்.

சட்: நீர் என்ன செய்தீர்?-நான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு சென்று கண்டக்டர் ஜேசுதாசனைப் பார்த்தேன்.

சட்: அவருடன் கதைத்தீரா?-ஆம். அவர் நடந்ததை கூறினர்.

### இருவருடன் கதைத்தேன்

சட்: வேறு யாரையும் கண்டீரா?-மற்றும் இருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டு அங்கு அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

சட்: அவர்களில் யாருடனும் கதைத்தீரா?-ஒருவருடன் கதைத்தேன்.

கமிஷனர்: அவர் பெயர் என்ன?-தெரியாது

சட்: பொலிஸாரால் தாக்கப்பட்டதாக கூறினர்?-ஆம்.

சட்: பின் என்ன செய்தீர்?-தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டருடன் தொடர்பு கொண்டு தாக்குதல் பற்றி கூறினேன். உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் கூறினேன்.

சட்: பின் என்ன செய்தீர்? கொழும்பிலுள்ள பிரதம கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் சம்பவம் பற்றி அறிவித்தேன். இ. போ. ச. தலைவருக்கும் அறிவித்தேன்.

சட்: 10 பஸ்கள் ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு உமக்கு கூறப்பட்டது?-ஆம்.

### பஸ்கள் அனுப்பினேன்

சட்: அப்போது டிப்போவில் இருந்தீர்?-ஆம்.

சட்: என்ன நடந்தது? பஸ்களை அனுப்பினேன். 15 நிமிடத்தால் நான் பின்னல் சென்றேன்.

சட்: அப்போது என்ன நடந்தது? விக்டோரியா சந்தியில் பொலிஸார் பஸ்களை மறித்தனர்.

சட்: எங்கு?-வேம்படிபாடசாலைக்கு செல்லும் வழியில், யாழ்ப்பாணம் எம். பி. வீட்டிற்கு முன்பாக.

சட்: என்ன நடந்தது என்று கேட்டீரா?-பொலிஸார் மறித்ததாக ஒரு ஊழியர் கூறினர்.

சட்: என்ன காரணம் என்று கேட்டீரா?-காரணம் தெரியவில்லை.

சட்: பிறகு?-பொலிஸார் தாக்கியதாக சாரதி ஒருவர் வந்து கூறினர்,

சட்: எதற்காக?- சைக்கிலுக்கு மேலாக பஸ்ஸை செலுத்த தாம் மறுத்ததற்காக.

சட்: யார் அந்த சாரதி?-செல்வராசா.

சட்: வேறு யாரும் வந்தார்களா?-சாரதி நாகமணி வந்து பொலிஸார் உத்தரவிட்டதால் தான், சயிக்கில்களுக்கு மேலால் பஸ்ஸை ஓட்டியதாகக் கூறினர். சேதமடைந்த சயிக்கில்களையும் எனக்குக் காட்டினர்.

சட்: சயிக்கில்கள் எங்கே கிடந்தது?-றோட்டுக்கருகில்.

சட்: இதுபற்றி யாருக்கும் புகார் செய்தீரா? அரசாங்க

(6-ம் பக்கம் பார்க்க)

' யாழ் அரசாங்க அதிபரையும், பொலிஸ் அதிபரையும் உடனடியாக இடமாற்றம் செய்யும்படி தொழிற்சங்கங்கள் கோரின. யாழ் கலவரத்துக்கு இவர்கள் இருவருமே காரணம் என்று தொழிற்சங்கங்கள் கருதின ''
சன்சோனி கமிஷன் முன்னிலையில்] யாழ். விசேட ஆணையாளர் சாட்சியம் [விபரம் உள்ளே]

நிற்சாமம் துப்பாக்கிச் சூடு:

## அடையாள அணிவகுப்பு ரத்து; சந்தேகநபர்களுக்கு றிமாண்ட்

[மாவிட்டபுரம்]

நிற்சாமம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக சரண்புகுந்த நபர்களை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குசெய்யப்பட்ட அடையாள அணிவகுப்பு இறுதிநேரத்தில் நிறுத்தப்பட்டு சந்தேகநபர்கள் தொடர்ந்து அடுத்தமாதம் 8-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

சங்கானை நிற்சாமத்தில் துப்பாக்கிகள் சகிதமான கோஷ்டி ஒன்று அவ்விடத்தைச் சேர்ந்த வீடொன்றினுள் இரவுநேரத்தில் புகுந்து நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த பொன்னன் குணம் என்பவர் படுகாயமடைந்ததுடன் அவரது 4 வயது மகள் ரசினு துப்பாக்கிக்குப் பலியானர்.

இச்சம்பவம் குறித்து சங்கானைப் பொலிசாரால் தேடப்பட்ட நிற்சாமத்தைச் சேர்ந்த கார்த்திகேசு இராசதுரை, கார்த்திகேசு காசிப்பிள்ளை, நாகமுத்து சிவப்பிரகாசம், பூதர் மனோகரன் அல்லது பூமாலை, வல்லிபுரம் மகாதேவன் அல்லது லிங்கம் ஆகிய ஐந்து சந்தேக நபர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண் புகுந்து றிமாண்டில் வைக்கப் பட்டிருந்தனர்.

இவர்களை அடையாளம் காண்பதற்காக மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மேற்படி சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர் ஜே. செல்வரத்தினம் இந்த அடையாள அணிவகுப்பு தேவையற்றதென நீதிபதியிடம் தெரிவித்தார். மேற்படி துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் இச்சந்தேக நபர்களே ஈடுபட்டார்கள் காயமடைந்த பொன்னன் குணமும், அவரது மனைவி இராசமணியும் தமது வாக்கு மூலத்தில் கூறியுள்ளதாலும் மற்றைய சாட்சியான எஸ். கந்தையா சம்பவத்தின்போது தாம் சந்தேக நபர்களைக்காணவில்லையெனக் கூறியுள்ளதாலும் அடையாள அணிவகுப்பு நடத்துவதில் அர்த்தமில்லை என்றும் அவர் சொன்னர்

இதையடுத்து அடையாள அணிவகுப்பை ரத்துச் செய்த நீதிபதி திரு எம் டி. யேசுரத்தினம் சந்தேக நபர்களைத் தொடர்ந்து அடுத்த மாதம் 8-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். (உ)

## செம்மணி கொலைவழக்கு நாளைவரை ஒத்திவைப்பு

[வவனியா]

செம்மணி துப்பாக்கிச் சூட்டுக் கொலைவழக்கு விசாரணை நாளை புதன்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்று திங்கட்கிழமை வவனியா மேல் நீதிமன்றத்தில் அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி திரு சி எல். ரி மூனமலே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது.

எதிரியாக இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள கான்ஸ்டபிள் ஸ்டான்லி, நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். சாட்சிகளும் வந்திருந்தனர்.

இவ்வழக்கை யாழ் நீதிமன்றத்தில் விசாரணை செய்தவரும் தற்போதைய மூதூர் நீதிபதியான திரு கே ஞானச்சந்திரனும் பிரசன்னமாகியிருந்தார். இவ்வழக்கு விசாரணை நாளை யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஜனப் எம் எம். அப்துல்காதர் முன்னிலையில் ஆரம்பமாகும். [உ]

## ஜனதிபதியிடம் கையளித்தார்

[கொழும்பு]

ஜனதிபதி திரு ஜே ஆர். ஜயவர்த்தனவை அவரது வாட் பிளேஸ் இல்லத்தில் சந்தித்து, இந்திய முன்னை அமைச்சரும், அண்ணாமலைப் பல்கலைக்கழக உப வேந்தருமாகிய பேராசிரியர் திரு எஸ். சந்திரசேகர் எழுதி, ஜனதிபதியிடம் கையளிக்குமாறு அனுப்பிய 'கலாயோகி ஆனந்தகுமாரசாமி', 'குடிசனப் பரம்பல் பற்றிய படிப்புகள்' ஆகிய இரண்டு நூல்களையும் தேசிய சுவடிக்கூடத் திணைக்கள உதவிச் சுவடிக் காப்பாளர் திரு க நவசோதி ஜனதிபதியிடம் நேரடியாகக் கையளித்தார். [உ]

## வரி விளம்பரம்

### தேவை

ஆங்கில தட்டெழுத்தாளர். சுருக்கெழுத்துத் திறனுடன் அலுவலக முறைகளை ஒழுங்காக செய்யக்கூடியவருக்கு முதலிடம் அளிக்கப்படும். அதற்கான பயிற்சியளிக்கப்பட்டு பின் குறைந்தது மூன்று வருடங்கள் சேவை புரியவேண்டும். பயிற்சியின் (2 மாதங்கள்) பின் சம்பளம் வழங்கப்படும்: விபரங்களுக்கு: செங்கதிர்செல்வர், 70, புங்கன்குளம் தெரு, யாழ்ப்பாணம். 8485

அனுபவமுள்ள தச்சு தொழிலாளர்களும் வேலைபழக விரும்புபவர்களும் உடனடியாக தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். மனேச்சர், வள்ளச்சாலை, முல்லைத்தீவு. 8489

## பிரதமருக்கு மகஜர்

(பண்டத்தரிப்பு)

"வரலாற்றுப் பெருமை மிக்கதும், இந்துக்களின் புனித ஸ்தலமாகக் கருதப்படுவதுமான கீரிமலை தீர்த்தக் கரைப்பகுதியை புனித ஸ்தலமாக அரசாங்கம் பிரகடனம் செய்து பாதுகாக்கவேண்டும்" என்று மயிலிட்டி ஐக்கிய தேசியக்கட்சிக் கிளையின் செயலாளர் திரு. கா. கணேசலிங்கம் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சரும், பிரதமருமான திரு. ஆ. பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

கீரிமலைத் கேணிப்பகுதியில் சமீபகாலமாக மது அருந்துதல், மாமிசம் புசித்தல் ஆகிய பல சமய விரோதச் செயல்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் அந்த மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

## தரமுயர்த்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பிரசவ விடுதியையும், மத்திய டிஸ்பென்சரியையும் கிராம ஆஸ்பத்திரி தரத்துக்கு உயர்த்தித் தருமாறு காங்கேசன்துறை ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. எஸ். கே. என். சிவராஜா சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளார். (உ)

## குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் பொதுக் கூட்டம் இம்மாதம் 22ந் தேதி நடைபெறவிருக்கிறது.

இதற்கான ஏற்பாட்டைச் செய்ய கம்யூனிஸ்ட்கட்சி, சமசமாஜகட்சிகள் இணைந்து ஒரு குழுவைத் தெரிவுசெய்துள்ளது.

இக்கூட்ட ஒழுங்கு சம்பந்தமாகக் கிளை உறுப்பினர்கள், கட்சி அங்கத்தவர்களுடன் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்கள் உரையாற்றுவர். (உ)

## மகளிர் பேரவை புனரமைப்பு

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சித் தொகுதித் தமிழ்மகளிர்பேரவை பொதுச் சபை புனரமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் கிளிநொச்சி எம். பி திரு. வி. ஆனந்தசங்கரி இல்லத்தில் நடைபெற்றது. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் கலந்துகொண்டார். [உ]

---

### சன்சோனி கமிஷன் விசாரணை

# "ஜி. ஏ. யையும் எஸ். பி. யையும் உடன் இடமாற்ற வேண்டும்"

## தொழிற்சங்கங்கள் கோரியதாக யாழ். விசேட ஆணையாளர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள சகல தொழிற்சங்கங்களும், ஒன்றிணைந்து அரசாங்கஅதிபர் திரு. விஜயபாலாவையும், பொலிஸ் அதிபர் திரு. செனிவரத்தினாவையும், உடனடியாக யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யவேண்டும் என்று கோரினார்கள். யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்திற்கு இவர்கள் இருவருமே காரணமெனக் கருதினார்கள்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு சிவஞானம், நாளை (செவ்வாய்க்கிழமை) யாழ் பெரியாஸ்பத்திரியில் சத்திர சிகிச்சைசெய்யப்பட விருப்பதாகவும் அவரை இன்று சாட்சியமளிக்க அழைக்குமாறும் வழக்கறிஞர் சாம் ஜெ. காதிர்காமர் கியூ. சி. கேட்டுக்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து கமிஷனர் திரு எம் சி சான்சோனி, ஆணையாளர் சிவஞானத்தை உடனடியாக வருமாறு அழைப்பாணை அனுப்புமாறு கமிஷன் உபசெயலாளர் திரு. சிவசுப்பிரமணியத்திடம் பணித்தார். உடனடியாக தொலைபேசி மூலம்ஆணையாளர் சிவஞானத்திற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர், மாநகரசபை காரியாலயத்திலிருந்து வந்து உடனடியாக கமிஷன் முன் ஆஜரானார்.

காலை 9-15 மணிக்கு எனக்கு மார்க்கெட் பொறுப்பாளரிடமிருந்து போன் வந்தது. காய்கறி மார்க்கட்டும் எரிவதாக கூறினார். நான் வரட்டுமா? என்று கேட்டேன். வருவது பாதுகாப்பல்லவென்றும் அங்கு பொலிஸார் நிற்பதாகவும் கூறினார்.

### தொடர்புகொள்ள முடியவில்லை

மக்கள் நெருப்பை அணைக்க முயல்வதாகவும், அதற்கு பொலிஸார் தடைசெய்து கொண்டிருப்பதாகவும் கூறினார். பின் பொலிஸ் அதிபருக்கும், யாழ்ப்பாணம் எம் பிக்கும் போன் செய்ய முயற்சித்தேன். தொடர்புகொள்ள முடியவில்லை. எஸ் பி க்கு நேரடி நம்பரில் தொடர்பு கொண்டேன். முடியவில்லை. பின் அரசாங்க அதிபருடன் தொடர்புகொள்ள முயன்றேன், அவரும் அங்கில்லை. மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜோசப்புடன் தொடர்புகொண்டு நடந்த சம்பவம் பற்றி கூறினேன், தீ பிடித்திருப்பது பாரதூரமான விஷயம் நான் அமைச்சுக்கு தொடர்புகொண்டு மார்க்கட்டில் தீ பிடித்த விஷயத்தை கூறினேன். 10 மணிக்கு நவீனமார்க்கெட்டிலும் தீ பிடித்துள்ளதாக தகவல் கிடைத்தது,

உடனே பலாலி இராணுவ முகாமுடன் தொடர்புகொண்டு தீயணைக்கும் படையை அனுப்புமாறு கோரினேன். பின் உதவி அரசாங்க அதிபர் திரு. ஜோசப்புடன் இருந்தாரா என்பது ஞாபகமில்லை. உயர் அதிகாரிகள் 10 நிமிடம் நின்றார்கள். கான்ஸ்டபிள்கள் தூரத்தில் நின்றார்கள். 35 பேர் வரை நின்றார்கள். சார்ஜன்ட், சப்-இன்ஸ்பெக்டர் நின்றது ஞாபகம் இல்லை.

### பொலிஸ் தாக்குதல்

17ந் தேதி கந்தோருக்குச் சென்றேன். அன்று கச்சேரியில் நடந்த மகாநாட்டில் கலந்துகொண்டேன். டி. ஐ ஜி. அரசாங்க அதிபர், எஸ். பி., அனுராதபுரம் எஸ். பி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

விட்டு முடினேன்;

கமிஷனர்: காருக்கு அடித்தார்களா?–

சிவஞானம்: ஆம். மற்றொருவர், இதுதான் கடைசிமுறை என ஆங்கிலத்தில் கூறிவிட்டு இந்தவழியால் இனிவரக்கூடாது என்று சிங்களத்தில் கூறினார். மற்றவர் எனக்குப் பக்கத்தில் நின்று என்னபெயர் என்று கேட்டார். நான் சிவஞானம் என்றேன். அதன் பின் கந்தோருக்குப்போய்விட்டேன்.

அங்கு மின்சார பொறியியலாளர் திரு. ஆனந்தமூர்த்தி காலை 11 மணிக்கு தனது காரையும் ஆரியகுளச் சந்தியில் பொலிசார் மறித்து தன்னைத் தாக்கியதாகக் கூறினார். தனது மோட்டார் சைக்கிளையும் தாக்கியதாகக் கூறினார். அவர்கள் பொலிஸ் யூனிபோம் அணிந்திருந்தனர்

## "என்ஜினியரின் மோட்டார் சயிக்கிளை நொறுக்கினர்"

சுகாதார அத்யட்சகர் டாக்டர் தசநாயக்காவும் கலந்து கொண்டார்.

அவர் மாநாட்டில் பொலிஸ் தாக்குதல் பற்றிக் கூறினார். அவர் இப்போது யாழ்ப்பாணத்தில் கடமையாற்றவில்லை

சட்டத்தரணி: அதற்கு அரசாங்க அதிபர் என்ன பதில் சொன்னார்?

சிவஞானம்: அரசாங்க அதிபர் பதிலளிக்கவில்லை. மாநாட்டிற்குப்பின் நான் கந்தோருக்கு வந்தேன். பின் திருநெல்வேலி தண்ணீர் விநியோக நிலையத்திற்குச் சென்று விட்டு பலாலி

கமிஷனர்: துப்பாக்கியும் வைத்திருந்தனரா?

சிவஞானம்: ஆம் அவர்களின் நம்பர் ஞாபகமில்லை. ஒருவர் நம்பர் அணிந்திருந்தார். மற்றவர்கள் பற்றி ஞாபகமில்லை. நான் அப்போது அதிர்ச்சியடைந்திருந்ததால் எதுவும் நினைவில்லை. அதன்பின் கந்தோருக்கு வந்தேன்.

நான் அமைச்சுக்கு உடனுக்குடன் நடந்த சம்பவங்களை அனுப்பிவந்தேன். 16-ந் திகதி முதல் அனுப்பிவந்தேன்

பிரதிகள் என்னிடம் இருக்கிறது.

இணைப்பு அதிகாரி திரு. ருத்திரா ராஜலிங்கம் 20-ந் திகதி மகாநாடு ஒன்று நடத்தினார். நானும் போனேன். அம்மாநாட்டுக் குறிப்பு எழுதப்பட்டது எனக்குப் பிரதி அனுப்பிவைக்கப்பட்டது.

### ஜி. ஏ.க்கு கடிதம்

18 ந் திகதி அரசாங்க அதிபருக்கு சம்பவம் பற்றி கூறினேன் நகரசுத்தி தொழிலாளர்கள் வேலை செய்யப் பயப்படுகிறார்களென்றும், சக்திவேல் என்ற தொழிலாளி பொலிசாரால் தாக்கப்பட்டதாகவும், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் அரசாங்க அதிபருக்கு எழுதினேன், கடிதத்தை நான் நேரில் கொண்டுபோய் அரசாங்க அதிபரிடம் கொடுத்தேன் அவர் அதனை டி ஐ ஜிக்கு கொடுத்தார் டி ஐ ஜி பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டு கவனம் எடுக்குமாறு கூறினார்

மாநகரசபையில் நகரசுத்தி ஊழியர் உட்பட சுமார் 1160 ஊழியர் கடமையாற்றுகிறார்கள் அவர்களுக்கு உண்மையில் பயம் இருந்தது பொலிசார் தாக்குவார்கள் என்ற பயமே அது

20-ம் தேதி நடந்தமாநாட்டில், இபோ சவினர். பொலிசார் பஸ் சாரதியையும் கண்டக்டரையும் தாக்கியதாகவும் கூறினார்கள், பெற்ரோல் இருப்புப் பற்றியும், ரயில் போக்குவரத்து இல்லாததினால் இந்த நிலைமை என்றும் கூறப்பட்டது. பேக்கரி உரிமையாளர்கள் சென்றுவிட்டதால் அங்கு வேலைகள் நடக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது கடைகளை திறக்கவும் 16-ம்

(6-ம் பக்கம் பார்க்க)

## "யாழ். ஆணையாளரின் காரை பொலிஸார் துவக்கால் இடித்தனர்"

ஆணையாளர் சாட்சியமளித்து முடிக்கும்போது கமிஷனர், சத்திரசிகிச்சையில் பூரணசுகம்பெற்றுதிரும்புமாறு ஆசி கூறி அனுப்பினார்.

திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது: 77 ஆகஸ்ட் 16ம் திகதி, நவீனமார்க்கட் கடைப் பொறுப்பாளர் வி சின்னத்தம்பி, குழப்பம்பற்றி தெரிவித்தார். மார்க்கட்டில் கடமையாற்றிய கிறிஸ்டி, பொலிசார் தாக்குவதாகவும், மக்கள் தங்கள் கடைகளை பாதுகாக்க வந்திருப்பதாகவும் கூறினார், பிரதான வாசலை திறந்துவிடும்படியும் வர்த்தகர்கள் விருப்பம்போல் நடக்கட்டும் எனக் கூறினேன். நான் அவ்விடத்திற்கு வருவதாகவும் கூறினேன்.

### மின்சார நிலையத்தில்

நான் மின்சாரநிலையத்திற்கு வீட்டிலிருந்து காலை 7-50 மணிக்கு சென்றேன், அங்குள்ள ஊழியர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தேன். அப்போது மக்கள் ஓடிவந்து மின்சாரநிலைய வளவிற்குள் பாதுகாப்பிற்காக புகுந்தார்கள். என்னநடந்ததெனக் கேட்டபோது. மக்களை பொலிஸார் தாக்குவதாகக் கூறினார்கள் நான் அங்கிருந்து மாநகர சபைக் கந்தோருக்கு 8 மணிக்குப் போனேன்.

தொடர்புகொண்டேன். நவீன மார்க்கட்டிலும் தீபிடித்துள்ளதாகக் கூறினேன். நவீன மார்க்கட் முழுவதும் தீக்கிரையானால் 20 லட்சம் ரூபா சேதமேற்படுமென்றும் வர்த்தகர்களின் பொருட்களும் சேர்ந்து மொத்தம் 60 அல்லது 70 லட்சம் ரூபா சேதமாகும் எனக் கூறி உடனடியாக உதவிசெய்யுமாறு கூறினேன்.

அரசாங்க அதிபர் இங்கு இல்லையென்றும் தான் பலாலி விமானநிலயத்திற்கு கொழும்பிலிருந்து வரும் உயர் அதிகாரிகளை வரவேற்கச் செல்வதாகவும் அச்சமயம் பலாலி இராணுவத்தினருடன் தொடர்புகொண்டு தீயணைக்கும் படையைஅனுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

12 மணிக்கு பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. பி. எல். பற்றிக் தொடர்புகொண்டு இராணுவத்தின் தீ அணைக்கும் படை வந்துள்ளதாகவும் அவர்களுக்குத் தண்ணீர் வசதியளிக்க ஏற்பாடு செய்யுமாறும் கூறினார் 2-30 மணியளவில் நான் அங்கு போனேன். ஐ ஜி பி, இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி ஆகியோர் நின்றனர் தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தேன். தீயை அணைக்க முயற்சி எடுக்கப்பட்டது. அன்று எஸ். பி.

ரோட்டால் திரும்பிவந்தேன்,

### துவக்குப்பிடியால் இடித்தார்

திரும்பிவரும்போது ஆரியகுளம் சந்தியில், நாகவிகாரைக்கு எதிரில் பொலிசார் என்னை தடுத்து மறித்தனர். நடுவீதியில் வாங்குகள் போட்டு தடுக்கப்பட்டிருந்தது. 8 கான்ஸ்டபிள்கள் நின்றனர். ஒருவர் வந்து துவக்குப் பிடியால் என் கார் 'பொனட்டில்' இடித்தார். மற்றவர்கள் என்னைச் சுற்றிவளைத்துக் கொண்டனர்.

ஆங்கிலத்தில் நான்தான் யாழ்ப்பாண விசேட ஆணையாளர் எனக்கூறினேன். அவர்களுக்கு நான் கூறிய ஆங்கிலம் விளங்கவில்லை என்பதை முகபாவத்திலிருந்து அறிந்து கொண்டேன்.

### இதுதான் கடைசிமுறை

விசேட ஆணையாளர் என்று காரிலும் எழுதப்பட்டிருந்தது. நான் காரிலிருந்து இறங்கினேன். அவர்களுடன்சிங்களத்தில் பேசினேன். 'நான் யாழ். விசேட ஆணையாளர்' என சிங்களத்தில் கூறினேன், ஒருவர் சிங்களத்தில் 'கொய்தயன்னே?' என்று கேட்டார். கந்தோருக்குப் போவதாகக் கூறினேன். டிக்கியைப் பார்க்கப்போவதாகக் கூறினார்கள். நான் டிக்கியை திறந்து காட்டி

ஈழநாடு
The Eelanaadu

# “ஐ. தே. க. ஆட்சி மீது குறுகிய காலத்திலேயே மக்களுக்கு வெறுப்பு”

## எதிர்க்கட்சித் தலைவர் ‘அமிர்’ உரை

[சுழிபுரம்]

“ஐக்கிய தேசியக் கட்சி, பதவிக்கு வந்து 6 மாதங்கள் பூர்த்தியாவதற்கிடையே மக்களின் வெறுப்புக்கு உள்ளாகி விட்டது” என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், தமக்குப் பண்ணாகம் அண்ணா கலைமன்றம் அளித்த விருந்துபசாரத்தில் பேசுகையில் கூறினார்.

பண்டிதர் ப. இராசகுரு தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

### அன்றும் இன்றும்

“அன்று முதல் இன்றுவரை நான் நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டே கடமை செய்து வந்துள்ளேன். தேவை எதுவென்பதை அறிந்து அவற்றை நிறைவேற்றிவைப்பதில் அதிகம் கவனம் செலுத்தி நடப்பதே எங்கள் கடமையாகும்.”

“ஒன்றுபட்டுச் செயல்படுவதே எங்கள் ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அதிக ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சியை நடத்துகின்ற ஐக்கிய தேசியக்கட்சியினர் 6 மாதங்கள் செல்வதற்கிடையில் மக்களின் வெறுப்புக்குள்ளாகியுள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. உணவுப் பொருட்கள் மற்றும் உப-பொருட்கள் பெற்றுக் கொள்ளமுடியாமல் மக்கள் அவதியுறுகின்றனர்.

“ஆட்சியாளர்கள் உலக வங்கியையும், சர்வதேச நாணயச் சபையையும் நம்பி நாட்டை அபிவிருத்திசெய்யப் பல திட்டங்களைத் தீட்டிவருகின்றனர். திட்டம் நல்லபடியாக அமைந்தாலும், இன்று நாட்டிலேற்பட்டுள்ள வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு இவற்றுக்கு ஈடுகொடுக்குமா என்பதுதான் பெரும் கேள்விக்குறியாக உள்ளது.

“நான் கடந்த காலத்தில் எம். பி.யாக இருந்தபோது எவ்வித பாகுபாடுமில்லாது சரியெனப்பட்டதைச் செய்து வந்துள்ளேன். வட்டுக்கோட்டைத் தொகுதியில், காரைநகர்ப் பகுதிக்கு நான் செய்த பணிகளை அங்குள்ள மக்கள் நன்கறிவார்கள்.

“சென்ற தேர்தலில் வெற்றி பெற்ற திரு. ஆ. தியாகராசா நான் கல்வி கற்ற விக்ரோறியாக் கல்லூரிக்கும், எனது சொந்தக் கிராமமான பண்ணாகத்திற்கும் எவ்வித உதவியும் செய்ய மறுத்துவிட்டார். இது போன்ற காரியங்கள் இனிமேல் நடைபெறமாட்டாது. தேவை என்ன? நியாயம் என்ன? என்பதை நிலைநாட்டுவதே எங்கள் பணியாகும்.

“வட்டுக்கோட்டைத் தொகுதி உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு சிறந்த செயல் வீரராவர். இவரது காலத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதி பல்வகை வேலைவாய்ப்புக்களையும், தொழில் அபிவிருத்தியையும் அடையுமென்பது திண்ணம்.

“பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திற்கு அமைய நிதி ஒதுக்கீடு நடைபெறும்போது ஒவ்வொரு கிராமமும் சம பங்கீட்டைப் பெற்றுக்கொள்ளவும், மேலும் முக்கியமான தேவைகளும் நிறைவேற்றப்படும்” என்றார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவும் பேசினார். (உ)

# வெளிநாட்டு விஜயம்

செயலதிகார முள்ள இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாகப் பதவி யேற்றபின்னர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா முதல் தடவையாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருக்கிறார்.

ஆஸ்திரேலியாவின் தலைநகரான சிட்னியில் நேற்று ஆரம்பமான பொதுநல அமைப்பு நாடுகளின் அரசாங்கத்தலைவர்களின் ஆசிய பசுபிக் பிரதேச மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ஜே. ஆர். சென்றிருக்கிறார்.

ஜனாதிபதியின் இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அமைச்சர்களும் பிரதமர்களும் வெளிநாடுகளுக்குச் செல்லத் தவறுவதில்லை.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அமைச்சர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று வந்துள்ளனர்.

அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவர வேண்டிய அவசியமிருந்தால் அவர்கள் சென்று வரத்தான் வேண்டும்.

ஆனால் வெளிநாடுகள் பலவற்றில் நமது நாட்டின் தூதுவர்கள் இருக்கின்றனர். இந்தத் தூதரகங்களுக்காக நாம் பெரும் தொகைப் பணத்தைச் செலவிடுகின்றோம்.

இந்தத் தூதரகங்களிருந்தும் ஒவ்வொரு விஷயத்துக்கும் அமைச்சர்கள் சென்றுவரவேண்டுமானால் தூதரகங்களினால் என்ன பயன்? எதற்காக அவற்றுக்குப் பணத்தைச் செலவிட வேண்டும்?

முன்னைய அரசாங்கத்தின் பிரதமரும் அமைச்சர்களும் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்றுவந்ததுபற்றி இன்று ஆட்சிபீடத்துக்கு வந்துள்ளவர்கள் முன்பு கண்டித்தனர்.

இதே கண்டனத்துக்கு இன்றைய அரசாங்கமும் இடம்வைக்கக்கூடாது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் முதலாவது வெளிநாட்டு விஜயம் மற்றொரு முன்மாதிரியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

பிரதமரோ அமைச்சர்களோ வெளிநாடுகளுக்குச் செல்லும்போது விமான நிலையத்தில் பெரும் ஆரவாரமும் ஆடம்பரமும் நிகழ்வது வழமையாகும்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் ஆரவாரங்கள் எதுவுமில்லாது அமைதியான எளிமையான முறையில் ஜனாதிபதி ஜயவர்த்தனா வெளிநாட்டுக்குச் சென்றிருக்கிறார்.

வீண் செலவில்லாமலும் காலநேரத்தை வீணாக்காமலும் வெளிநாடு சென்று திரும்பவேண்டுமென்பதைச் செயலில் காட்டியிருக்கிறார் ஜனாதிபதி.

அமைச்சர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இது நல்ல படிப்பினையாக இருக்கவேண்டும்.

# சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழா

## கோலாகலமாகக் கொண்டாட ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

ஆறுமுகநாவலருக்கு அடுத்த வரிசையில் தமிழுலகில் சைவம் வளர்த்த பெரியார் சிவபாதசுந்தரனாரின் சகல நூல்களையும், அவர் வெளியிட்ட ஆங்கில நூலையும் மீண்டும் அச்சுவாகனமேற்ற லண்டன் பதிப்பகத்தாரிடம் அனுமதி கோருவதென, நேற்று முன் தினம் கூடிய சிவபாதசுந்தரனார் நூற்றாண்டுவிழா ஆலோசனைச் சபை முடிவுசெய்தது.

இக் கூட்டம் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியில் நடைபெற்றது.

சிவபாதசுந்தரனாரின் நூற்றாண்டுவிழாவை விமரிசையாக நான்கு நாட்கள் சுழிபுரம், திருக்கேதீஸ்வரம், பொலிகண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தொடர்ந்து நடத்துவதெனக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

அன்னாரின் குருபூசை தினம் எதிர்வரும் ஆகஸ்ட் 9ந் திகதி சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் கொண்டாடப்படும். அடுத்தநாள் 10-ம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினமாக வருவதால், சிவபாதசுந்தரனார் திருக்கேதீஸ்வரத்தின்முதல்புனருத்தாரணசபையின்தலைவராக சேவையாற்றியமையினால் பகல் கேதீச்சரத்தில் நடராஜப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும்.

3ம் நாள் 11ம் திகதி பெரியார் தமது இறுதிக்காலத்தில் சேவையாற்றிய இடமான பொலிகண்டிகந்தவனக்கடவை ஆலயத்தில், விசேஷ உருத்திராபிஷேகமும் பின்னர் அன்னதானமும் நடைபெறும்.

விழா இறுதிநாளான 12ம் திகதி யாழ்ப்பாணத்தில் பெருவிழாவாகக் கொண்டாடப்படும். பொதுக்கூட்டம், பட்டிமன்றம், விவாத அரங்கு, கலை நிகழ்ச்சிகள், ஆகியன அன்று நடாத்தப்படும்.

பெரியாரது தமிழ், சைவத் தொண்டைக் கௌரவிக்குமுகமாக அவரது நூல்களை மறுபிரசுரம் செய்து, பாடநூல்களாக அனுமதிப்பதற்கு தூதுக்குழுவொன்று கல்வியமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்னாவை விரைவில் சந்திக்க ஏற்பாடு செய்வதென்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இச் சேவைகளுக்கு பெரும் நிதி தேவைப்படுவதால், இலங்கையில் அன்னாரது மாணவர்களைக் கொண்ட குழுக்கள் நிதிதிரட்டுவதற்கு தெரிவு செய்யப்பட்டன. விழாவுக்கான மலர் வெளியிடவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

நூற்றாண்டு விழா ஆலோசனைக் கூட்டத்தில் முக்கிய பிரமுகர்கள் கலந்துதாமாகவே பெருந்தொகையான நிதியினை அளிக்க முன்வந்தனர்.

நூற்றாண்டு விழா தலைவராக திரு. த. சிதம்பரப்பிள்ளையும் இணைக்காரியதரிசிகளாக திரு க கிருஷ்ணபிள்ளையும் திரு சபாரத்தினம்ஆகியோரும் பொருளாளராக திரு அ சின்னையாவும் தெரிவாகினர். 25 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். [கெ-அ]

# “மிகுதிக் கோரிக்கைகளும் கிடைக்க உதவுக”

## அமைச்சுக்கு சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொதுசைத் தொழில் தொழிலாளர்சங்கம், உள்ளூராட்சியமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில், அண்மையில் சங்கம் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தின்போது அமைச்சு காட்டிய அக்கறைக்கும், உரியநேரத்தில் எடுத்த நடவடிக்கைக்கும் சங்கம்தனது நன்றியைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

“கடந்த ஜனவரி 31ம் திகதி யாழ் மாநகரசபையில் வேலைபார்க்கும் எம்து அங்கத்தவர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தின்போது நீங்கள் அனுப்பிய தந்திக்கும், எம்மீது காட்டிய அக்கறைக்கும் மிகவும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். மாநகர விசேஷ ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளில் மிகுதியான 9 கோரிக்கைகளையும் நாம் விரைவாகவே பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்” என்று இக் கடிதத்தில் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

### மணிவாக்கு

அவரவர் செய்த பழவினைக்கு த்தகவேயாவும் அளந்தளிக்கப்பட்டுள்ளன. இந்தநியதி மாற்ற முடியாதது. இதனை நன்குணர்ந்து தனக்குப் பொருந்தியவண்ணம் ஒருவன்வாழக்கடவன்.

—யோகர்சுவாமி

### ‘செவ்வந்தி’

திரு. பா. தவபாலனை ஆசிரியாகக் கொண்ட ‘செவ்வந்தி’ டிசம்பர் இதழ் கிடைக்கப் பெற்றோம்.

சட்டத்தரணி கே. சற்குருநாதனின் ‘கோகிலாம்பாள் கொலைவழக்கு’ கட்டுரைத் தொடர் இவ்விதழில் ஆரம்பமாகியுள்ளது. சுதந்திர வர்த்தகவலயம் தொடர்பான விசேடகட்டுரை மற்றும் வழமையான அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

# வேலணை வைத்தியசாலை: எம். பிக்கு மகஜர்

[வேலணை]

வேலணை அரசினர் மருத்துவமனைக்கு கூடுதலான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு மேற்படி வைத்தியசாலை அதிகாரி டாக்டர் எஸ். சண்முகராஜா ஊர்காவற்றுறைத் தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்திடமும், மேலிடத்திடமும் மகஜர் மூலம் கேட்டிருக்கின்றார்.

இந்த வைத்தியசாலையில் சிறுவர் சிகிச்சைப்பிரிவு, ஆண்கள், பெண்களுக்கான தனித்தனி விடுதிகள் வைத்தியசாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தங்குவதற்கான விடுதிகள் ஆஸ்பத்திரிக்கு தகுந்த பாதுகாப்பு மருந்தக அறை, களஞ்சிய அறைகள், குளிர்சாதன வசதிகள் முதலிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு மகஜரில் இவர் கேட்டிருக்கின்றார். [உ]

# உற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கிழக்கு தல்லையற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும். 21-ந் திகதி தேர்த் திருவிழா நடைபெறும். (கெ)

# ‘அமிரி’ன் 18 மணி நேர பொதுச்சேவை

[சுழிபுரம்]

எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பியுமான திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் நாளாந்தக் கடமைகள் என்ன?

இதற்கு அவரே பண்ணாகம் அண்ணா கலைமன்ற விருந்துபசாரத்தில் உரையாற்றுகையில் பதிலளித்தார்.

தினமும் பதினெட்டு மணித்தியாலங்களை பொதுச்சேவைக்காகவும் ஒரு மணித்தியாலத்தை உணவுக்காகவும் மிகுதி ஐந்து மணித்தியாலங்களை உறங்குவதற்காகவும் தாம் செலவிடுவதாக திரு. ‘அமிர்’ தெரிவித்தார். [உ]

# ஏ.ஜி.ஏ. ஏற்பாடு

[நெல்லியடி]

பருத்தித்துறை பஸ் நிலையத்தின் முன்பாக அரசாங்க விளம்பரங்களை மக்கள் பார்வையிடுவதற்கான விளம்பரப் பட்டெடி ஒன்று திறந்து வைக்கப்பட்டது. நவீன முறையில் அமைக்கப்பட்ட இவ்விளம்பரப் பெட்டி வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. த. மார்க்கண்டுவின் ஆலோசனையின்படி ஏற்பாடு செய்யப்பட்டது. (உ)

# இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தின் முதலாண்டுக் கூட்டம் இன்று பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. சிவாபசுபதி தலைமை வகிப்பார்.

இக் கூட்டத்தில் அருட்திரு. ம. செல்வரத்தினம் அடிகளார் “புதிய தோர் உலகம் செய்வோம்.” என்ற பொருள் பற்றி உரையாற்றுவார். [உ]

சிட்னி பொதுநல அமைப்பு ஆசிய - பசுபிக் மகாநாடு:

# வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தங்கியிருந்த ஹோட்டலின் முன் குண்டு வெடிப்பு!

## பொலிஸ்காரர் உட்பட 3 பேர் பலி!

சிட்னி, பெப். 13

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பொதுநல அமைப்பு நாடுகளின் ஆசிய-பசுபிக் பிராந்திய மகாநாட்டில் கலந்துகொள்ளச்சென்ற வெளிநாட்டுத் தலைவர்கள் தங்கியிருந்த ஹோட்டலின் முன்னால் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் ஒரு பொலிஸ்காரர் உட்பட மூவர் பலியாகியுள்ளனர்.

ஹோட்டலின் முன்வாசலின் அருகே குப்பை லொறி ஒன்றிலேயே இவ் விபத்து இடம்பெற்றதாகவும் ஹோட்டலில் தங்கியிருந்த வெளிநாட்டுத் தலைவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த இரவு இடம்பெற்ற இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் குப்பை கூட்டும் 2 தொழிலாளிகளும் ஒரு பொலிஸ்காரரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள். வேறு சிலர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### ஹோட்டலில் ஆஸி.-இந்திய பிரதமர்கள்

குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றபோது, ஹோட்டலில் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. மல்கம் பிரேஸர் உட்பட பல வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தங்கியிருந்தனர்.

### அனுமதேய தொலைபேசி அழைப்பு

குண்டு வெடிப்புக்கு முன் ஹோட்டலுக்கு அனுமதேய தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைக்கப்பெற்றதாகவும் சில நிமிடங்களின் பின்னர் குண்டுகள் வெடித்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

### சந்தேக நபர்களை தேடும் பொறுப்பு பிரதமரிடம்

குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்களைத் தேடும் பணிகளை ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. மல்கம் பிரேஸர் பொறுப்பேற்றுள்ளார்.

### மூவரைப் பொலிஸ் தேடுகிறது

இச்சம்பவம் நடைபெறுவதற்குச் சிறுதுநேரத்திற்குமுன்னர் அந்த ஹோட்டலிலிருந்து ஐஸ்கிறீம் வான் ஒன்றில் ஏறிச்சென்ற மூவரை இது தொடர்பாக பொலிஸார் தேடுகின்றனர்.

### மொரார்ஜி கருத்து

பயங்கரவாதம் ஒருபைத்தியகாரச் செயல் என்று இந்தியப் பிரதமர் திரு தேசாய் இச்சம்பவம்பற்றி கருத்துத்தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

இன்று மகாநாடு பலத்த பாதுகாப்புடன் ஆரம்பமாகியது. [இ]

யாழ். பனம்பொருள் சங்கம்:

## அடையாள வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர தெங்கு பனம்பொருட் சங்க ஊழியர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையே அடையாள வேலைநிறுத்த விஷயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இது பற்றி ஆராய, நிர்வாகம் அவகாசம் கேட்டுக்கொண்டதையடுத்து அடையாள வேலைநிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [உ]

தெல்லிப்பழை ஊழியர்

## கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்வராம்

[யாழ்ப்பாணம்]

தமது கோரிக்கைகளை முன் முன்வைத்துத் தாம் வேலைநிறுத்தத்தில் குதிக்கவிருப்பதாக தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள்உற்பத்தி விற்பனக்வுகூட்டுறவு ஊழியர் சங்க உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

வேலையில் இருந்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் விஷயங்கள் வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் தொடர்பாகவும் சங்கத்தலைவர், முகாமையாளர், கூட்டுறவு உதவி ஆணையாளர், அமைச்சர் முதலானோருக்குப் பல தடவைகள் அறிவித்தும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று இந்த உத்தியோகத்தர் தெரிவித்தார்.

1973-ம் ஆண்டு எழுந்த பிரச்னைகளையும் சம்பள உயர்வு, லீவு போன்ற கோரிக்கைகளையும் முன்வைத்து தாம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதாகவும் பின் உறுதிமொழியை அடுத்து வேலைக்குத் திரும்பியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேற்படி கோரிக்கைகளுடன் மேலதிக வேலைநேர ஊதியம், விபத்து நஷ்டஈடு, காப்புறுதி செய்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து விரைவில் வேலைநிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். [உ]

...

சர்க்காரியா அறிக்கை:

## மத்திய அரசு அக்கறையின்றி இருக்கவில்லை

சென்னை, பெப். 13

''சர்க்காரியா கமிஷன் விசாரணை அறிக்கை விஷயத்தில் மத்திய அரசு அசிரத்தையாக இருக்கவில்லை'' என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறினார்.

சென்னையில் நிருபர்களிடம் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

முன்னாள் தமிழ்நாடு முதல் அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதிக்கும், அவரது சகாக்களுக்கும் எதிராகச் சுமத்தப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டை விசாரணைசெய்வதற்கு இக்கமிஷன் நியமிக்கப்பட்டது தெரிந்ததே.

சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த பாரத உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங், சர்க்காரியா கமிஷன் அறிக்கை மீது மாநில அரசு தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## என்னைக் கொலைசெய்ய சதி நடக்கிறது

### இந்திராகாந்தி குற்றச்சாட்டு

பெங்களூர், பெப். 13

தம்மைக்கொலை செய்வதற்குத் திட்டமிட்ட சதி நடைபெறுகிறது என்று முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறியுள்ளார்.

பெங்களூரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சமீபத்தில் தம்மை நோக்கி வீசப்பட்ட கற்களின் பருமனை நோக்கும்போது இக்கொலை நோக்கம் புரிகிறது. என்று கூறிய திருமதி காந்தி, இக்கொலைச்சதியின் பின்னணி என்ன என்பது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

## ''மக்களின் அறிவுக்கு இழைக்கும் அக்கிரமமே பத்திரிகைத் தணிக்கை''

பங்களூர், பெப். 13

''பத்திரிகைத் தணிக்கை முறையை அமுல் செய்வது மக்களின் அறிவுக்கு இழைக்கப்படும் அக்கிரமமாகும்''.

இவ்வாறு இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. எல். கே. அட்வாணி தெரிவித்தார்.

பெங்களூரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் மேலும் பேசுகையில் கூறிய தாவது:

'பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கலாம் என ஜனதா அரசு கூறியுள்ளபோதிலும் பத்திரிகைத் தணிக்கை முறை இன்னும் அமுலில் உள்ளது'' என்று திருமதி காந்தி கூறியுள்ளார். இது அபத்தமான கூற்று இதில் எதுவித உண்மையுமில்லை. பத்திரிகைகள் எல்லாம் என்றுமில்லாதவாறு சுதந்திரமாக இயங்குகிறது ' [இ]

......

### ரயில் விபத்து: 10 பேர் பலி

சென்னை, பெப். 13

தமிழ்நாட்டில் நெல்லூருக்கு அருகே நடந்த ரயில் விபத்தில் 10 பேர் பலியாகியுள்ளனர் என்றும் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

### 2 பாக். தலைவர்கள் விடுதலை

இஸ்லாமாபாத், பெப். 13

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவின் மக்கள் கட்சித் தலைவர்கள் இருவர் நேற்று இராணுவ அரசினால் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாப் பூட்டோவுடன் கைது செய்யப்பட்ட இவர்கள் இரு வருடம், 5 மாதங்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். [இ]

......

நட்சத்திர விழாவில்

### ரூ. 50 லட்சம் வசூல்

சென்னை, பெப். 13

தென் இந்திய நடிகர் சங்கம் மதுரையில் நடத்திய நட்சத்திர கலைவிழாவில் வசூலித்த 50 லட்சம் ரூபா அண்மையில் இடம்பெற்ற புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நட்சத்திர நிகழ்ச்சியை 4 லட்சம் மக்கள் பார்வையிட்டனர். [இ]

### எம். ஜி. ஆர். மீண்டும் நடிப்பார்

சென்னை, பெப். 13

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமசந்திரன் படங்களில் நடிக்கப் போவதாக நேற்று ஒரு பொதுக்கூட்டத்தில் அறிவித்தார்.

முன்பு மேற்கு வங்க முதல்வராக இருந்த டாக்டர் வி. சி. ராய் முதலமைச்சராக இருந்துகொண்டே தமது மருத்துவத் தொழிலையும் கவனித்துவந்ததை திரு. ராமச்சந்திரன் சுட்டிக்காட்டினார்.

......

### தூதுக்குழு

புதுடில்லி, பெப். 13

1962 ம் ஆண்டு சீன-இந்திய யுத்தத்திற்குப்பின் முதல் தடவையாக சீன வர்த்தகத் தூதுக்குழு ஒன்று இந்தியா வந்துள்ளது.

12 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழு இந்தியாவில் 15 நாட்கள் தங்கியிருந்து இந்திய அதிகாரிகளுடனும் வர்த்தகப் பிரமுகர்களுடனும் பேச்சு நடத்தும். [இ]

...

### புதிய ஏற்பாடு பிரதி வெளியீடு

[யாழ்ப்பாணம்]

யாழ்மறை மாவட்ட இலக்கியக்கழகம் அச்சிட்ட புதிய ஏற்பாட்டு பிரதி வெளியீட்டு விழா இன்று மாலை யாழ் ஆசனக்கோவிலில் யாழ் ஆயர். தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெறும். விழாவில் சிறப்புச் சொற்பொழிவை, மன்னார் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. சூசைதாஸன் நிகழ்த்துவார்.

சிறப்பு நிகழ்ச்சியாக, உரை அரங்கு, கவியரங்கு, கலையரங்கு முதலியவை இடம் பெறும்.

......

### யாழ்.நகர முன்னேற்றக் கழகம்

(யாழ்ப்பாணம்)

உபகார கல்வித்திட்டத்தின் கீழ் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், யப்பான், சிங்கள மொழியை இலவசமாகக் கற்பிப்பதற்கு யாழ்நகர் முன்னேற்றக்கழகம் முன்வந்துள்ளது. இக்கழகம் உபகார கல்வித்திட்டத்தின்கீழ் ஆறு பேர்களுக்குமட்டும் ஆறுமாதத்திற்கு ஒருதடவை அவர்களின் முழுக்கல்வியையும் வழங்குமாம். இதற்கு மூவர் கொண்ட குழுவொன்று நேர்முகப் பரீட்சைமூலம் தெரிவுசெய்யும். வறியமாணவர்களுக்கு இச்சலுகை வழங்கப்படுமாம். [செ]

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினியின்
மோட்டார் சுந்தரம்பிள்ளை

சிறுவர்களுக்கான ஆங்கிலப்படம்!
18-2-78, 19-2-78 சனி, ஞாயிறு காலை 8-30மணிக்குமட்டும்
"Kingdom in the Clouds"

றீகல் புதிய வெளியீடு!
(யாழ். நகர்) அசோக்குமார்—மீனாகுமாரி
தினசரி 2-30, 6-30 இரவு 9-45 நடித்த
பக்கீஷா - PAKEEZAH
ஹிந்தி (கலர்-சினிமாஸ்கோப்)

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்-வைஜெயந்திமாலா
நடித்த
தேன்நிலவு

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

50-வது நாளைநோக்கி வெற்றிநடைபோட்டு ஓடுகிறது
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.
குறிப்பு: கடைசி இரு வாரங்கள் மட்டும்

2-வது வெற்றி மாதம்
ராணி வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனீட்டா
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.!

ராஜா தினசரி: 10-30, 2-30-6-30, 9-30
[யாழ்ப்பாணம்] ஜெய்சங்கர் கே.ஆர்.விஜயா சோ
விஜயகுமார் மனோகர்
நடிக்க
அசோகா பிரதர்ஸ்
அளிக்கும்
அபிராமி மூவீஸ்




திரைக்கதை-வசனம்-டைரக்ஷன்:
மதுரை திருமாறன்
ஒளிப்பதிவு: ராமச்சந்திரன்
இசை:
எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடல்கள்:
கண்ணதாசன்-வாலி

# "வடக்கு, கிழக்கில் தொழில் வளம் பெருகவேண்டும்"

— வட்டு. எம். பி.

[வட்டுக்கோட்டை]

காரைநகரில் வாழ்கின்ற மக்கள் அரசாங்க உத்தியோகங்களை நம்பி வாழ்பவர்களல்ல. இவர்கள் வெளிமாகாணங்களிலே வியாபாரத்துறையில் உன்னத நிலையில் இருக்கின்றனர். இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ்மக்கள் தமது வியாபாரங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் விருத்திசெய்தல்வேண்டும். இனிமேல் ஆரம்பிக்கின்ற தொழில் நிலையங்களையும், வியாபார ஸ்தாபனங்களையும் வடக்குக் கிழக்கில் உண்டாக்கி இங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதோடு எமது பொருளாதாரத்தையும் விருத்தி செய்தல்வேண்டும்.

இவ்வாறு, காரைநகரில் பாலா அச்சகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய வட்டுக்கோட்டைத் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இவ்விழாவில் பேசுகையில் "அச்சகங்கள் நல்ல கருத்துக்களைப் பரப்பி சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பயன்படும் அதே நேரத்தில், ஆபாசக் கருத்துக்களையும், கண்டனங்களையும், தூற்றுதல்களையும்பரப்புவதன் மூலம் சமுதாயத்தின் தாழ்விற்கும் பயன்படுகின்றன. சமையலுக்குப் பயன்படும் நெருப்பு வீட்டைக் கொழுத்தி அழிக்கப் பயன்படுதல்போல அச்சகத் தொழிலும் சமுதாயத்தின் உயர்வுக்கும். தாழ்விற்கும்உபயோகிக்கப்படுகின்றது, சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, ஆத்மஜோதி அச்சக உரிமையாளர் திரு. நா. அருமைநாயகம், சைவமணி மு. சபாரத்தினம் ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டு பேசினர். [அ]

## ஆலயம் புனரமைப்பு

[நெல்லியடி]

பருத்தித்துறை வல்லிபுரக் குருக்கட்டு சித்திவிநாயகர் ஆலயம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப வேலைகள் நேற்றுப் பாலஸ்தாபன வைபவத்துடன் ஆரம்பமானது. அன்று காலை விசேட பூசையும் நடைபெற்றது.

ஒரு லட்சம் ரூபா செலவில் இந்தப் புனரமைப்பு நடை பெறுமென மேற்படி ஆலய நிர்வாகசபையைச் சேர்ந்த திரு. மு. பச்சைமால்முருகன் தெரிவித்தார். [உ]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெமினி - சரோஜாதேவி
பனித்திரை

RIO Daily 4 Shows
(Jaffna) Last Few Days
HIGH VELOCITY

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-0
சிவாஜி - வாணிஸ்ரீ
சிவகாமியின
செல்வன்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-45,
நினைத்ததை
முடிப்பவன்

## ஓடும் பஸ்ஸில் ஒரு தாயின் அவதி

[வேலணை]

குழந்தையை கையில் தூக்கிக் கொண்டு பஸ்ஸில் பிரயாணம் செய்த தாய் ஒருவர் அந்தக் குழந்தையுடன் பஸ்ஸுக்குள்ளேயே விழுந்தார். இதனால் அக்குழந்தை பஸ் சீட்டில் அடிபட்டதினால் தலையில் காயம் ஏற்பட்டது.

இச்சம்பவம் ஊர்காவற்றுறை பஸ்சில் இடம்பெற்றது.

மேற்படி கைக்குழந்தையுடன் நின்றுகொண்டு பிரயாணம் செய்த இப்பெண்ணுக்கு இருக்கையில் இருந்த சக பிரயாணிகள் ஏவராவது இருப்பதற்கு இடம் கொடுக்காது பார்த்துக்கொண்டிருந்தனராம். [உ]

## தராசுத் திருடன்

[கரணவாய்]

நள்ளிரவில் வர்த்தகர் ஒருவரின் வீட்டிற்குள் புகுந்த திருடன் அங்கிருந்து விலையுயர்ந்த தராசு ஒன்றை திருடிச் சென்றுளான்.

வதிரியைச் சேர்ந்த அரிய குணராஜா எனும் வர்த்தகர் வீட்டிலேயே இத்திருட்டுநடைபெற்றது. சந்தடி கேட்டு விழித்தெழுந்த வர்த்தகர் திருடனைத் துரத்திப் பிடித்த போதும், திருடன் சாதுரியமாக அவரிடமிருந்து தப்பி தராசுடன் மறைந்துவிட்டானாம்.

இத்திருட்டுக்குறித்து பருத்தித்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. [உ]

## நிர்வாகிகள்

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூகநிலைய நிர்வாகிகள்: தலைவர் ஐ சங்கரப்பிள்ளை, உப தலைவர் ரி விசுவநாதன், இணைச் செயலாளர்கள் வ சிவயோகநாதன், பொ தர்மபாலன், பொருளாளர் ந சிவச்செல்வநாதன், உப பொருளாளர் அ ஸ்ரீரஞ்சன், நிலையப் பொறுப்பாளர் மு ததீஸ்வரன், கணக்காய்வாளர் ஆ இராசசுந்தரம், பொதுச்சபை உறுப்பினர் ச கமலநாதன், ஐ விஜயகாந்தன் க முருகேசு.

0 0 0

யாழ்ப்பாணம் குருநகர் றெக்ளமேசன் சனசமூகநிலைய நிர்வாகிகள்: தலைவர் ம ஹென்றி, உப தலைவர் ஈ விறஞ்சித், செயலாளர் ச அ செல்வக்குமார், உப செயலாளர் வெ அகஸ்ரின், பரிசோதகர் ச ம இம்மனுவல், கலைப் பொறுப்பாளர் ஜி வி பேர்மினஸ், விளையாட்டுத் தலைவர் அ அந்தோனிப்பிள்ளை, செயற்குழு உறுப்பினர்கள் செ தர்சியஸ், அ செபமாலை, சா யேம்ஸ், அ யேசுதாசன்.

0 0 0

கிளிநொச்சி இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள்: தலைவர் வ செ இராசரத்தினம், உப தலைவர் ச இம்மனுவல், செயலாளர் நா கோபாலநாதன், உப செயலாளர் க விவேகானந்தராசா, தனாதிகாரி நா பூபாலசிங்கம், நிர்வாகசபை உறுப்பினர்கள்: செ கமலநாதன், திருமதி மங்கையர்க்கரசி, க சிவலிங்கம், சோ முத்துராமன், செல்வி இ செபஸ்தியம்மா.

0 0 0

தொண்டமானாறு விஞ்ஞான வெளிக்கள ஆராய்ச்சி நிலைய நிர்வாகிகள்: தலைவர்: கே.எஸ். குகதாசன் [நிலைய இயக்குனர்]. உபதலைவர்கள்: எம். அற்புதநாதன் [பாடவிதான சபையின் விஞ்ஞான கல்வியதிகாரி], வி.கே.ஈசுவரபாதம் [உடுப்பிட்டி வட்டார கல்வியதிகாரி]. கே.இரத்தினசபாபதிப்பிள்ளை [சென்.பற்றிக்ஸ்], வி. சச்சிதானந்தன் [அச்சுவேலி ம.வி] பொருளாளர்: ஜேய். காந்தராஜா [நெல்லியடி ம.ம.வி.] உபபொருளாளர்: கே. சண்முகசுந்தரம் [உடுப்பிட்டி அ.மி. கல்லூரி]. பத்திராதிபர்: பி. நடராஜா [மகாஜனக்கல்லூரி] நூலகப் பொறுப்பாளர்: என். கணேசபிள்ளை [சோமாஸ்கந்தா கல்லூரி]. கணக்கு பரிசோதகர்: கே.குணரத்தினம் [அதிபர், நெல்லியடி ம.ம.வி] தொடர் அதிகாரி: கே. பொன்னம்பலம் [யாழ் மாவட்ட விஞ்ஞான கல்வியதிகாரி]. செயற்குழு உறுப்பினர் 7.

கோண்டாவில்

## கி. மு. சங்க ஆண்டு விழா

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் வடக்கு கிராமமுன்னேற்றச்சங்க 18வது ஆண்டு நிறைவுவிழாவும் அரசினர் பாலர் பாடசாலை 1வது ஆண்டு நிறைவு விழாவும் இம்மாதம் 18ம் திகதி சனிக்கிழமை கி.மு. சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு.ச குலசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், தேசியப்பேரவை உறுப்பினர்கள் திரு. மு.சிவசிதம்பரம், திரு. கி. கதிரவேலுப்பிள்ளை, செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு.வ. பொன்னம்பலம், யாழ்.உதவி அரசாங்க அதிபரும் கொக்குவில் கோண்டாவில் கிராம சபை விசேட ஆணையாளருமான திரு. என். அமிர்தசாகரன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், யாழ். லயன்ஸ்கிளப் தலைவர் டாக்டர் எஸ்.சுப்பிரமணியம் உட்பட பலர் உரையாற்றுவர்.

யாழ்.வளாகத்தலைவர் திரு சு வித்தியானந்தன் தலைமையில் கி மு ச. நாடக மன்றத்தாரின் 'இலாவுதீன்' சரித்திர நாடகம் 300வது தடவையாக மேடையேற்றப்படவிருக்கிறது.

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
[illegible]ணவன்

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
லிடோ போன் 7693
(யாழ் நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# கோட்டு விற்பனவு

மாவட்ட நீதிமன்றம்,
கொழும்பு.
இல: ஈ/426/எம்

மேக்களரைல் கிறடிட் லிமிற்றெட் கொழும்பு

வழக்காளி

எதிராக

1. மைக்கல்ஸ்ரீபன்ஜோச் இலக்றிக்கல் வெல்டிங் வேக் சொப் கண்டி ரோட் சாவகச்சேரியில் உள்ள தேவேந்திரா படமாளிகைக்கு எதிராக.
2. கிறகரிசிறில் இல: 245, ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம்.
3. சின்னவன் தர்மன் நன்னியன் நாகரத்தினம் எஸ். ரி. நாகலிங்கம் அன் கொம்பனி, சுன்னாகம்.

எதிராளிகள்

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இலக்கம் ஈ/426/எம் வழக்கில் எனக்குக் கிடைத்த ஆதனத்துக்கெதிரான நிறைவேற்று எழுத்தாணையின் பிரகாரம் இ எல் 3914 (A 40) என்னும் இலக்கமுடைய வாகனத்தை (8-3-1978) 8 பங்குனி 1978 பிற்பகல் 3மணிக்கு யாழ் மேல் நீதிமன்ற வளவில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

## தீர்வைத்தொகை

(அ) ரூபா 8915/16ம், கடனை முற்றுக இறுக்கும் வரை 9129/53க்கு 29-8-1974ல் இருந்து மாதம் ஒன்றிற்கு 1% வீதவட்டியும்.

(ஆ) வழக்காளிக்கு 136324 இலக்கமுடைய பொறியும் (எஞ்சின்) எப் ஏ டி 21/296409 இலக்கமுடைய "செசி" யும் ஈ எல் 8966 என்றபதிவு இலக்கமும் உடையது மான மொறிஸ் மைனர் மோட்டார்காரை இயக்கக் கூடிய முறையில் வழக்காளிக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும் அல்லது அதன் ஆட்சியை பெறமுடியாவிட்டால் எதிராளிகள் வழக்காளிக்கு ரூபா 12,000/-மும் முழுத்தொகையும் கொடுக்கும்வரை தீர்வை நிறைவேற்றுத் திகதியிலிருந்து சட்ட பூர்வமான வட்டியுடன் கொடுக்க வேண்டும்.

(இ) 29-8-1974ல் இருந்து வழக்காளிக்கு வாகனத்தை அல்லது அதன் பெறுமதியை கொடுக்கும் வரை மாதம் ஒன்றிற்கு அல்லது மாதத்தில் ஒரு பகுதிக்கு ரூபா 550/- வீதம் நட்டஈடாக எதிராளிகள் கொடுக்கவேண்டும்.

(ஈ) மேற்கூறிய (அ) (இ) என குறிப்பிட்ட பந்திகளில் மொத்தத் தொகையை வழக்காளி வட்டி தவிர்த்து ரூபா 10,825/37 ஆக மட்டுப்படுத்தியுள்ளார்.

(உ) வழக்குச் செலவு எதிராளிகள் வழக்காளிக்குக் கொடுத்தல் வேண்டும்.

க. கணபதிப்பிள்ளை,

பிஸ்கால்,
மேல்நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
8506

# தேசிய சுவீப் முடிவுகள்

காலியில் இழுக்கப்பட்ட 650-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:
**46 Q 0515**
ரூபா 100 000

2-வது பரிசு:
**18 Q 0428**
ரூபா 40,000

3-வது பரிசு:
**17 E 0783**
ரூபா 10,000

தலா 1,700 ரூபா பரிசு பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 19 A 0430 | 56 A 0283 |
| 13 B 0249 | 16 B 0913 |
| 29 B 0488 | 24 B 0790 |
| 29 B 0926 | 17 B 0058 |
| 34 C 0699 | 54 C 0956 |
| 41 D 0196 | 28 D 0376 |
| 02 D 0193 | 16 D 0188 |
| 28 E 0891 | 15 E 0766 |
| 54 E 0611 | 59 F 0643 |
| 40 E 0746 | 03 F 0192 |
| 27 F 0876 | 09 G 1000 |
| 07 G 0042 | 53 G 0315 |
| 25 G 0453 | 21 H 0912 |
| 57 H 0295 | 01 H 0726 |
| 35 H 0185 | 46 H 0936 |
| 17 H 0510 | 34 H 0103 |
| 26 J 0581 | 55 J 0928 |
| 12 J 0774 | 27 J 0960 |
| 62 K 0530 | 27 K 0387 |
| 22 L 0220 | 03 L 0241 |
| 43 L 0604 | 36 L 0341 |
| 33 L 0307 | 04 L 0769 |
| 43 M 0823 | 27 M 0461 |
| 12 M 0841 | 43 M 0417 |
| 42 M 0475 | 36 M 0502 |
| 57 N 0568 | 16 N 0951 |
| 28 N 0236 | 48 N 0012 |
| 26 N 0672 | 25 O 0028 |
| 62 O 0865 | 41 O 0925 |
| 43 O 0429 | 33 P 0003 |
| 39 P 0012 | 17 P 0256 |
| 33 Q 0764 | 40 R 0845 |
| 54 R 0845 | 33 R 0173 |
| 38 S 0048 | 11 S 0657 |
| 11 S 0927 | 40 S 0853 |
| 33 T 0046 | 33 T 0056 |
| 21 T 0247 | 38 T 0135 |
| 19 T 0165 | 58 T 0400 |
| 32 U 0792 | 09 U 0252 |
| 06 U 0045 | 47 U 0635 |
| 35 V 0848 | 01 V 0134 |
| 26 V 0558 | 33 V 0031 |
| 39 V 0459 | 17 V 0242 |
| 18 W 0067 | 05 W 0338 |
| 19 W 0125 | 09 W 0534 |
| 13 X 0737 | 23 X 0319 |
| 19 X 0374 | 39 X 0773 |
| 25 Y 0037 | 07 Y 0348 |
| 09 Y 0499 | 81 Z 0293 |
| 34 Z 0982 | 38 Z 0513 |

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.]

## ஏ. ஜி. யையும் —

[2 ம் பக்கத்தொடர்ச்சி]
திகதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்துவரும் கச்சேரி ஊழியர்கள் மீண்டும் வேலைக்குச் செல்லவும் சாத்தியமான எல்லா வழிகளையும் எடுக்க வேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது. மாநாட்டுஅறிக்கையை ஆணையாளர் கமிஷன் முன் படித்தார்.

19ம் திகதி இணைப்புஅதிகாரி நியமிக்கப்பட்டார். மற்ற இடங்களுக்கும் நியமிக்கப்பட்டது தெரியும்.

அகதிகள் தொடர்பாக எழுதப்பட்ட கடிதங்களையும் ஆணையாளர் படித்தார். கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலுள்ள அகதிகள் முகாமை நேரில்போய் பார்த்து தேவையான சுகாதாரவசதிகள் செய்யப்பட்டதாகவும் இந்துக்கல்லூரியிலும் அகதிகள் முகாம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

ஊரடங்குச் சட்டம் 27ந் தேதி வரை தொடர்ந்து இருந்தது 26ம் தேதி இரவு 7 மணிமுதல் காலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் இருந்தது 26ம் தேதி இரவு பஸ் நிலையத்திற்கு எதிரில் உள்ள 26 கடைகள் எரிந்து தரைமட்டமாகின இக்கடைகள் திருப்பி கட்ட 2 லட்சம் முடிந்தது. பழைய மார்க்கட் கடைகள் திருப்பிக்கட்ட நாலரை லட்சம் ரூபா முடிந்தது:

### உடன் செல்லவில்லை

ஊரடங்குசட்ட நேரம். யாழ் பஸ் நிலைய கடைகள் தீக்கிரையாகின. இதுதொடர்பாக ஆணையாளர் படித்த கடிதத்தில், கிலர் நெருப்பு வைத்ததாகவும், அதிகாலை 4-30 மணியளவில் தீ அணைக்கப்பட்டதாகவும், எழுதப்பட்டிருந்தது. நான் உடனே சம்பவம் நடந்தஇடத்திற்கு செல்லவில்லை அப்போது ஊரடங்கு சட்டம்இருந்ததினால் உயிருக்கு ஆபத்தாக இருக்குமென கருதினேன்

யாழ்ப்பாணம் மாநகரசபையில் தீஅணைக்கும் பிரிவு இல்லை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் தீஅணைக்கும் படை இல்லை. வாளி மூலமும் பைப் மூலமும் தண்ணீர் பெற்றே அணைக்கவேண்டியிருந்தது.

ஊரடங்கு சட்டம் எடுத்த பின்னர், யாழ்ப்பாணத்தில் எந்த இடத்திலும், தீச்சம்பவங்கள் ஏற்படவில்லை என்பது எனக்கு தெரியும்.

மாநகர சபைக்கு ஏற்பட்ட நஷ்டத்திலும் பார்க்க பன்மடங்கு நஷ்டம் வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ளது இவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டதா என்பது எனக்கு தெரியாது. மாநகர சபை எதுவும் வழங்கவில்லை.

## பஸ்கள் —

[5ம் கலத்தொடர்ச்சி]
சட்: இப்புகார்களை தொடர்ந்து மாநாட்டில் என்ன முடிவு செய்யப்பட்டது?- பொலிஸ் தாக்குதல் பற்றி புகார் செய்ய மக்கள் பொலிஸ் நிலையம் செல்ல பயப்படுவதால், யாழ் கச்சேரியில் ஒரு பொலிஸ் பிரிவை சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தரின் பொறுப்பில் ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டது.

சட்: நீர் அதன் பின் எங்கே போனீர்?- ஜி. ஏ. காரியாலயத்திற்கு.

சட்: எதற்காக?- பருத்தித் துறை டிப்போவிற்கு போன் செய்ய.

சட்: அப்போ டி. ஐ. ஜி வந்தாரா?-ஆம்.

### டி. ஐ. ஜி. கதைத்தார்

சட்: டி. ஐ. ஜி. போனில் கதைத்தாரா?-ஆம்.

(மிகுதி நாளை வரும்)

## மரண அறிவித்தல்

### யோசெப்பு தம்பு சுவாமிநாதர்

மல்லாகத்தைச்சேர்ந்த மலாயன் பென்சனர் யோசெப்பு தம்பு சுவாமிநாதர் அவர்கள் காலமாகிவிட்டார். இவர் மைலிட்டி மூத்ததம்பி தம்பிப்பிள்ளை அவர்களின் சகோதரரும், காலஞ்சென்ற மலாயன் பென்சனர் சங்கரப்பிள்ளை அப்பாத்துரை, சங்கரப்பிள்ளை கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், பத்மதேவி கனகசிங்கம், சத்தியபாலதேவி சண்முகநாதன், கமலாதேவி அமிர்தலிங்கம் ஆகியோரின் மாமனாரும் தேவகி பவானி கௌரி, கலா ஆகியோரின் பேரனுமாவர். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் சமக்காலைக்கு 14-2-78 மாலை மூன்று மணிக்கு எடுத்துச்செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும் 8508

# பஸ்களில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]
அதிபர், டி ஐ ஜிக்கும் 17-ம் திகதி மாநாட்டில் கூறினேன்.

சட்: 17-ம் திகதி ரயில் நிலையத்திற்கு பஸ்களை அனுப்பினீரா?-ஆம்

சட்: ஏன்? ரயிலில் வரும் அகதிகளை அவர்கள் வீடுகளுக்கு கொண்டு செல்வதற்கு.

### மக்கள் கூட்டமாக

சட்: நீரும் ரயில் நிலையத்திற்கு போனீரா?-ஆம்

சட்: அங்கு என்ன கண்டீர்?-மக்கள் பெரும் கூட்டமாக நின்றார்கள்

சட்: எங்கிருந்த அகதிகள் வருவதாக இருந்தது?- முதல் நாள் அநுராதபுரம் ரயில்நிலையத்தில் தாக்கப்பட்டவர்கள்

சட்: பின்?-அங்கு நின்ற மக்கள் மத்தியில் பதட்டநிலை காணப்பட்டது. ஆதலால் அகதிகளை நாவற்குழி ரயில் நிலையத்தில் இறக்க ஏற்பாடு செய்யுமாறு யாழ்ப்பாண எம். பி.க்கு ஆலோசனை கூறினேன். அதன்படி அகதிகள் நாவற்குழியில் இறக்கப்பட்டார்கள்.

சட்: பஸ்கள் நாவற்குழிக்கு சென்றனவா?-ஆம்.

சட்: அதுபற்றி விபரம்? சாரதியின் 'லொக் சீட்டில்' பதியப்பட்டுள்ளது.

சட்: 'லொக்சீட்' என்றால் என்ன? டிப்போவிலிருந்து பஸ் புறப்பட்ட நேரமும், வந்த நேரமும், மற்றும் பல இடங்களில் பஸ் சென்று திரும்பிய நேரமும் பதியப்பட்டிருக்கும்,

சட்: லொக்சீட் யார் பதிவது?- சாரதி.

சட்: 'வேபில்' யார் பதிவது?-கண்டக்டர்.

சட்: 'வேபில்' வில் என்ன பதிவது?- ரிக்கட் வழங்கியவிபரமும், சேர்ந்த பணம் பற்றிய விபரமும்.

### கடத்தப்பட்ட பஸ்

சட்: கடத்தப்பட்ட பஸ் லொக்சீட்டில் பதியப்பட்டதா?-ஆம்.

சட்: அதன் இலக்கம்?- 23 ஸ்ரீ 2227.

சட்: இந்த பஸ் சாரதி, நாவற்குளியிலிருந்து அகதிகளை கொண்டு போனார்?-ஆம்.

சட்: எங்கு கொண்டு போனார்?- குறிக்கட்டுவானுக்கு.

சட்: அங்கிருந்து எங்கே வந்தது?- பஸ் டிப்போவுக்கு

சட்: டிப்போவிற்கு வந்ததா?-இல்லை, வழியில் கடத்தப்பட்டது;

சட்: எங்கே?- நாகவிகாரைச் சந்தியில்.

சட்; யாரால்?- பொலிஸாரால்.

சட்; எங்கேகடத்தினார்கள்? கன்னாதிட்டிக்கு.

சட்: எதற்கு? கொள்ளையடிக்க.

சட்: எங்கே? நகைக்கடையில்.

சட்; பின்?- நாகவிகாரைச் சந்திக்கு வந்தனர்.

சட்: அங்கிருந்து? டிப்போ வந்து சேர்ந்தன.

சட்: சாரதி 'லொக்சிட்' டில் என்ன எழுதப்பட்டுள்ளது?- ஆரியகுளம் சந்தியில் பொலிசார் ஏறி, கன்னாதிட்டிக்குச் சென்று சில நகைக்கடைகளைக் கொள்ளையடித்து பின் திரும்பி வந்துவிட்டனர். சாரதி என எழுதப்பட்டிருந்தது

### இலவசமாக இல்லை

சட்: நாவற்குழியில் அகதிகளை பஸ்ஸில் இலவசமாக ஏற்றினார்களா?-இல்லை அன்று அப்படியான உத்தரவு இல்லை.

சட்: அகதிகள் பணம் கொடுத்தார்களா?-ஆம்.

சட்: எவ்வளவு? 71 ரூபா 30 சதம்.

சட்: யார் தந்தது?- அகதிகளில் ஒருவர்.

சட்: அன்று மொத்தம் எவ்வளவு கிடைத்தது?-600 ரூபா.

சட்: நாடு முழுவதும் அகதிகள் பஸ்ஸிற்கு பணம் கொடுத்தா பிரயாணம் செய்தார்கள்?-இல்லை. அதன்பின இலவசமாகவே கொண்டுசெல்லப்பட்டனர்.

சட்: எப்பொழுது?- 17ம் தேதிக்கு பின் காசு அறவிடப்படவில்லை.

சட்: நாகவிகாரையிலிருந்து அனுராதபுரத்திற்கும் பஸ்ஸில் அகதிகள் சென்றனரா?-ஆம்.

சட்: எத்தனையாம் திகதி?- 18ம் திகதி.

சட்; எத்தனை பேர்?-750பேர்

சட்; நாவற்குழியிலிருந்து பஸ்ஸில் எத்தனைபேர் சென்றனர்?- 400 அல்லது 500 பேர்.

சட்: நாகவிகாரையிலிருந்து எப்பொழுதுகொண்டுபோனார்கள்?- காலையில்.

சட்; 17ம் தேதி மாநாடுஎத்தனை மணிக்கு நடந்தது?- 11மணிக்கு.

சட்: எப்பொழுது முடிந்தது?- 12-30 மணிக்கு.

சட்: டிப்போவிற்கு எப்போது போனீர்?- 1 மணிக்கு.

சட்; கடத்தப்பட்ட பஸ் ஊழியர் வந்து நடந்தவற்றை கூறினார்களா? ஆம்.

### எனக்குத் தெரியாது

சட்: அதுவரை உமக்கு பஸ் கடத்தல் பற்றி தெரியாது?- ஆம் டிப்போ உதவியாளர் சொக்கலிங்கத்தால் பஸ் கடத்தல் பற்றி 'லொக்' முறைப்பாடு எழுதப்பட்டிருந்தது.

சட்: என்ன எழுதப்பட்டிருந்தது?- பொலிசார் பஸ்ஸை கடத்திச் செல்வதாக.

சட்; என்னென்று தெரியும்? பாதுகாப்பு உத்தியோகத்தர் பரமேஸ்வரன் போன் செய்து கூறியிருந்தார்.

சட்: அவருக்கு எப்படித் தெரியும்?-கடத்தப்பட்ட பஸ்ஸில் அவரும் சேன்றிருந்தார்.

சட்: என்ன கூறினார்?-யூனிபோம் அணிந்த பொலிசார் சிங்களத்தில் பஸ்ஸை கன்னாதிட்டிக்கு ஓட்டுமாறு பணித்ததாக.

### எத்தனை மைல்

சட்: நாகவிகாரையிலிருந்து கன்னாதிட்டி எத்தனை மைல்?- அரை மைல்.

சட்: பரமேஸ்வரன் எப்படி அந்த பஸ்ஸில் வந்தார்?-இந்த இந்த பஸ் குறிக்கட்டுவானில் அகதிகளை இறக்கிவிட்டு பஸ் நிலையத்திற்கு வந்தது.

சட்: அப்பொழுது பஸ்நிலையத்தில் நின்ற பரமேஸ்வரன், டிப்போ செல்வதற்காக அந்த பஸ்ஸில் ஏறினார்.

சட்: பின் எப்படி இறங்கினார்?- பொலிசார் பஸ்ஸைக் கடத்திச் செல்லும்போது ஒரு மாதிரி வெலிங்டன் சந்தியில் இறங்கி, டிப்போவிற்கு போன் பண்ணினார்.

### புகார் செய்தார்

சட்: பஸ்சாரதி வந்துபுகார் செய்தார்? ஆம்.

சட்: கடத்தப்பட்ட பஸ் எப்பொழுது டிப்போவிற்குவந்தது?- பிற்பகல் 2-15 மணிக்கு.

சட்: அகதிகளைக் கொண்டு சென்ற மற்ற பஸ்கள்?- ஒன்றரை மணி நேரத்திற்குமுன் டிப்போவிற்கு வந்தன,

சட்: பரமேஸ்வரனும் பின் டிப்போவிற்கு வந்தார்?- ஆம்.

சட்: அவர் வாக்குமூலம் எடுக்கப்பட்டது?-ஆம்.

சட்: வாக்குமூலம் யாரால் பதியப்பட்டது?-டி ஐ ஜியால்

சட்: எப்பொழுது? - 18ம் தேதி

சட்: பஸ் தேவையென்றீர்களா?-ஆம்

### பத்து பஸ்கள்

சட்: எத்தனை பஸ்?- 10 பஸ்கள்.

சட்; பின் என்ன நடந்தது?

சட்: சுகாதார அத்தியட்சகர் புகார் செய்தாரா? ஆம்.

சட்: எதைப்பற்றி?-பொலிஸ் தாக்குதல் பற்றி.

சட்: அவர் சிங்களவரா? தமிழரா?-சிங்களவர்.

சட்: என்ன புகார்?- மக்களை பொலிஸார் தாக்குவதாக

சட்: சுங்க உதவி கலக்டர் சேனரத்னவும் புகார் செய்தாரா?-ஆம்

சட்: எப்படி?- மக்களை பொலிஸார் தாக்குவதாக.

(3-ம் கலம் பார்க்க)

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் இலக்கம் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelapaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as a Newspaper in Srilanka